# சிவானந்தரின் அறிவுரைகள்



(சுவாமி சிவானந்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஷிகேசம்
ஸ்ரீலஸ்ரீ
சுவாமி
சிவானந்தரின்

முதல்
வருடாந்தப்
புண்ணிய
திதி

(ஆஷாட
பகுள
நவமி
2-8-64)

இலவச
வெளியீடு.

வெளியிடுவோர்:
திவ்ய ஜீவன சங்கம்
யாழ்ப்பாணக் கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்தரின் அறிவுரைகள்

1. துறவு மட்டும் உம்மைப் பயமின்றியவராயும் மகிழ்ச்சியுள்ளவராயும் செய்யமுடியும். அதுவே நித்திய அமைதியையும் அழிவின்மையை யும் அளிப்பது.

2. இவ்வுலகம் ஒரு கண்மாயம் அன்று. அது தனி முதலைக் காட்டிலும் ஒரு கீழ்த்தர மெய்மைக்கு உரிமையாயுள்ளது. அது ஒரு தொடர்பான அல்லது சார்பான மெய்மை. ஆனல் பிரம்மம் ஒரு தனி மெய்மை.

3. மனிதவர்க்கம் அனைத்தினதும் நிலையான ஒரு மையின் அடிப்படை இருதயச் சமயமே. இருத யச் சமயமே அன்புச் சமயம்

4. மனிதர் வெறுப்பும் அற்ப இயல்பிலுமிருந்து சுவாதீனமாயும் ஒழுக்கப் பண்பாட்டில் நிறை வாக நிலையுற்றும் இருந்தால் மாத்திரம் அவர் கள் ஒன்றுபடுத்தப்படலாம்.

5. கண்மாயம் அஞ்ஞானத்திலிருந்து பிறந்துள் ளது. கண்மாயத்திலிருந்து பிரிவு, வேற்றுமை இருமை, நானுவிதம், கர்வம் விளைவாகின்றன ஆகையால் ஆன்ம ஞான வாளால் அஞ்ஞா னத்தை அழித்துப் பந்தமற்றவராகுக.

6. தன் எண்ணங்களின் கூட்டுத் தொகையிலி ருந்து பரிணமிக்கும் விளைவே மனிதன்.

7. அமைதியே நிலவுலகில் மிகவதிகமாக விரும்பப் படக்கூடிய உடைமை! அதுவே உலகனைத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் மிகப்பெரும் பொக்கிஷம். அமைதியே எல்லாளவர்ச்சிக்கும் விருத்திக்கும் மிக முக்கியமும் இன்றியமையாததுமான மூலகாரணம். அமைதியே அதீத நனவுநிலை உணர்வாகிய நான்காம் நிலை.

8. அகந்தையை அகற்றலே ஆத்மானுபூதிக்குத் தனி நிபந்தனை.

9. தீமை என்பது நலப்பாட்டின் சிறப்பை ஒப்பிட்டு முறையாகக் காட்டுவதற்கு ஒருவித அறிவு.

10. பிரிய ராம! அறமும் மறமும் இன்பமும் துன்பமும் மனதினதே. உம்முடையதன்று. நீர் கர்த்தாவும் அல்லீர். போக்தாவும் அல்லீர். உண்மையாக நீர் என்றும் பந்தமற்றிருக்கிறீர். ''நான் செய்வோன், நான் நுகர்வோன்'' என்னும் கருத்துக்களைத் துறந்து என்றும் மகிழ்ச்சியாய் இருக்குக.

11. மனம், ஒரு தவறான கருத்துக் காடு. அதனுள் ஆசையாகிய நதி பிரமாண்டமான வேகத்துடன் எமது பற்றுக்கோடாகிய நன்மை தீமை என்னும் இரு கரைகளுக்கு மிடையில் பாய்கிறது.

12. மனம் இருக்கும் பரியந்தம் உலகம் உண்டு. மனம் அழிக்கப்பட்டபோது உலகம் தனிப்பொருளாக இருப்பது ஒழிகிறது.

13. ஒழுக்க வாழ்வின் முக்கியாமிசங்களாவன;- நேர்மை, வாய்மை, பரிவு, பணிவு, உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம் அல்லது சுவாசிக்கும் ஒவ்வொருபிராணிக்கும் அன்பான ஆதரவு, நிறை தன்னலமற்ற தன்மை, சத்தியம், பிரமசரியம், அகிம்சை, அபரிக்கிரகம் (பிறர்பொருள் கவராமை) பகட்டும் பாசாங்கும் இன்மை, பேரண்ட அன்பு.

14. நிறை நலப் பாட்டில் வாழ்வது அநந்தத்தில் ஒடுக்குவதே.

15. பிராரப்தமும் புருஷார்த்தமும் ஒன்ருனவை. பிராரப்தம் உண்மையாகப் பூர்வ வாழ்வின் புருஷார்த்தமே. அது ஒரு முடிவின்றிய பந்தம். செம்மையான முயற்சி எப்போதும் உமக்கு மகிழ்ச்சியான விளேவுகளாகிய நல் அறுவடையைத் தருகிறது. பிராரப்தத்தைக் கேவலம் சகித்தல் ஆன்மீக வளர்ச்சியின் படுமோசமான எதிரியாகிய ஊழ்வாதத்தை மனிதனில் உண்டாக்குகிறது. அவ்வாருன சகித்தல் அவனே மிகுதியாக மனத்தளர்ச்சியடையச் செய்கிறது; இச்சாசக்தி அவனேவிட்டு விலகுகிறது.

16. உலகின் உண்மை இயல்பின் அகக்காட்சி பெற்றிருக்கும், உலகைப்பற்றிய உண்மையை உண்மையாகக் கண்டுணர்ந்திருக்கும், விவேகம் இயற்பண்பாகப் பெற்றிருக்கும் மனிதர் தங்கள் ஆன்மாவை உயர்நிலேக்கு உயர்த்தித் தங்களேத் தம்சொந்தத் தன்ஊக்கத்தாலும் உழைப்பாலும் உலகப் பொருட்களுக்குத் தீயவேட்கையிலும் வாஞ்சையிலுமிருந்து தங்களேயே விடுவிக்கிருர்கள். 'உத்தரெத் ஆத்மன் ஆத்மனும்' ஆத்மா ஆத்மாவால் வெளிப்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஒருவரின் தனித்தன் முனைப்பு, முன்பாகவே உய்த்துணர்ந்த சிந்தைகள், பாராட்டுக்கருத்துக்கள், தப்பெண்ணங்கள், தன்னலக்கருத்துகள் முதலியவை கைவிடப்படவேண்டும். இவையனைத்தும் ஆன்மீகமுன்னேற்றத்திற்குத் தடையாய் இருக்கின்றன. இக்கீழான அகங்காரமும் அடங்காத தன்னல இயல்பும் நீக்கப்பட்டாலன்றி சத்சங்கம் அல்லது சத்துபதேசத்தால் நலம்பெறுவது கஷ்டம். நீர் உம்மையே ஒழுங்கு படுத்தக் கற்கும் போது, பூரணமாக கடவுளுக்குக் கீழ்ப் படுத்தி அவரைச் சரணடையும்போது மாத்திரம் கடவுளருள் தொழிற்பட ஆரம்பிக்கிறது.

18. உமது பார்க்கக் கூடிய கடவுளர்களைப் பசியுடன் நிர்வாணமாக வெளிப்புறத்தில் நிற்க வைத்திருக்கையில் எதற்காக உமது கடவுளை தேவதைகளிலும் ஆலயங்களிலும்காண்பதற்கு முயற்சிக்கிறீர். உறுபல உயர்நிறைவை நீர் அடைய விரும்பினுல் எங்கும் அவர் காணப்படுவதாய்க் கருதி நீர் எல்லாப் பிராணிகளையும் ஆர்வ மிகுந்த உணர்ச்சியுடன் சேவிக்க வேண்டும். உண்மையாக இறைவனை நோக்கிய அன்பு படைப்பு முழுமையிலும் அன்பைஉண்டுபண்ண வேண்டும். ஏனெனின் நீர் அவரை அனைத்திலும் காணவேண்டும்.

19. எது இருமையிலிருந்து சுவாதீனமானதோ, எதுஅநந்தமும் அழிவற்றதுமாய் இருக்கிறதோ எது உலகின் ஆதாரமோ, எது விகாரத்திலிருந்து சுவாதீனமானதோ—அப்பிரம்மமே நீர்! ஓ துணிவுள்ள சாதக! இருமையின்றிய அழிவற்ற பிரம்மத்தை தியானித்து அவரை இக்கணநேரமே உணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. அன்பாகியவிளக்கைஇருதயத்திற்கொளுத்துக. ஏனெனின் அன்பே நித்திய அமைதியும் மகிழ்ச்சியுமாகிய பெரும் பிரதேசமான கடவுளது இராச்சியத்திற்கு நேர்வழி.

21. எங்கு அன்பு உண்டோ அங்கு அமைதி உண்டு. எங்கு அமைதி உண்டோ அங்கு அன்பு உண்டு.

22. எவன் ராமரை நினைவில் வைத்து அவரது நாமத்தைப் பாடுகிறானோ அம்மனிதன் நற்பேறுடையவனும் மகிழ்ச்சியானவனுமே. அவன் எல்லாக் கவலை, தொல்லை, கிலேசம், பயம், துக்கம், மனக்குழப்பம், பீடை முதலியவற்றிலிருந்து என்றும் சுயாதீனமாயிருக்கிறான்.

23. பிறப்பும் இறப்பும் வாழ்வாகிய நாடகத்தில் இரு காட்சிகளே. பிறப்பு ஆழ்ந்த தூக்கத்திற்குப்பின் விழிப்பது போன்றது மட்டுமே. இறப்பு ஒரு நீண்டகால நித்திரை போன்றது மட்டுமே. அனைத்தும் கழிகிறது. அனைத்தும் துயரமே, அனைத்தும்வேதனையே, வில்லங்கமே. அனைத்தும் அசத்தே. போலியே. இவ்வுலகம் நிறங்களினதும் ஒலிகளினதும் வெறும் விளையாட்டே. இதனால், ஓ மனிதனே! உன்இருதய அறைகளுள் என்றும் பிரகாசிப்பதும் அநந்தமும் நித்தியமும் விகாரமற்றது மாகியதை, நிலையானதை, நிறைஇன்பமானதை, சத்துப் பொருளை நாடுக.

24. மோட்சம் என்பது மனமாசுகளின் அழிவைத் தவிர யாதுமன்று. ஆசைகள், அச்சங்கள் அனைத்தும் அகற்றப்பட்டபோது மனம் தூய்மை அடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. தெய்வீகவாழ்வு நடாத்துக. தெய்வீக வாழ்வு வாழ்க. எங்கும் தெய்வீக வாழ்வாகிய விளக்கைக் கொளுத்துக. அசைக்க முடியாத இனிமை மன நிலையை நிலை நிறுத்துவதும் தூய்மையும் பணிவிணக்கமுமாயிருப்பதும் எல்லாச் சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாயிருப்பதுமே உமது நோக்கமாயிருக்க வேண்டும்.

26. செம்மையைநாடி நல்லெண்ணத்துடன் வாழ்வது உமது கடமை. பணிவிணக்கம், பணிவு, ஆண்மை, பொறுமை, மன்னிக்கும் நெஞ்சம், பேரண்ட அன்பு முதலியவற்றை நீர் விருத்தியாக்க வேண்டும்.

27. நிறைஇனிமை நடத்தையே ஒரு தன்னடக்கமுடைய மனிதனின் விவரிக்க முடியாத அறிகுறி. இதுவே ஞான அறிகுறி. இதுவே உண்மை உடைமையின் நடைமுறை நிறுவல். இதுவே உமது இலட்சியமா யிருக்க வேண்டும்.

28. தெய்வ உணர்வுடன் என்றும் இருத்தல், தெய்வ இருப்பை என்றும் உணர்தல், உமது இருதய அறைகளுள்ளும் உம்மைச்சுற்றி எல்லா இடத்திலும் இருக்கும் பரம்பொருட் தெரிநிலையில் என்றும் வாழ்தல்—இதுவே இவ்வுலகில் இருக்கும்போது கூட, உண்மையாகப் பூரண வாழ்வு வாழ்தல், தெய்வீக நிறை வாழ்வு வாழ்தல்.

29. அச்சுடர் உமதுசொந்த ஆன்மாவுள்ளே பிரகாசமாய் எரிவதாய் என்றும் உணர்க. ஒவ்வொரு வடிவத்திலும் முகத்திலும் ஒளி பிரகாசிப்பதைக் காண்க. ஒவ்வொரு தோற்றப் பாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலும் தவருத இருப்பை அங்கீகரிக்கக் கற்க. இம்முறையில் வாழ்பவர் செம்மையிலிருந்து, தர்மத்திலிருந்து ஒருபோதும் தவறுவதில்லை. அவர் எப்போதாயினும் உண்மையைப் புறக் கணிப்பதில்லை. அவர் ஒருபோதும் அஞ்ஞான மாகிய இருளில் அகப்படுவதில்லை. அப்படிப் பட்டவர் ஒருபோதும் பொய் கூறுவதில்லை. ஏனெனின் அவர் இறைவன் அந்தர்யாமியாக ஒவ்வொரு பிராணியினதும் அகத்தேயுள்ள ஒதுக்கிடத்தினுள் வசிப்பதை அறிகிருர். அவர் ஒருபோதும் பாவம் புரிவதில்லை. ஏனெனின் சர்வவியாபக இறைவனிடமிருந்து யாதும் மறைக்கப்பட முடியாது. உண்மையான செய் வோன் உண்மையாக இவ்வுலக மேடையில் தம்மை நடிக்கத் தூண்டும் இறைவனே என்ற றிந்து அவர் என்றும் தம் கடமையைக் கம்பீர மாகச் செய்கிருர்.

30. உண்மையை அறிவதற்கு ஒருவனின் சொந்த உள்ளுணர்வைத் தவிர வேறு வழிவகையாதும் இல்லை. விசாரணை அல்லது ஆய்வு உள்ளுணர் வின் வாயிலைத்திறக்கிறது. இறையருளாலும் பல பிறப்புகளிற் செய்த நிஷ்காமிய கர்வத்தா லும் சாதன சதுட்டயம் இயற்பண்பாகப் பெற்ற தூய மனதுள் மாத்திரம் விசாரணை எழுகிறது.

31. இவ்வுலகமே உமது சிறந்த ஆசான். இவ்வுல கம் ஒருபெரும் பரீட்சை மண்டபம். மனிதன் இவ்வுலகில் பல விஷயங்கள் கற்க வேண்டும். இங்கு அவன் சித்திபெற்ருல் அழிவற்ற வாழ் வின் வாயில்வழி அவனுக்குத் திறக்கப்படும். உமது ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக இருக்கும் ஒவ்வொன்றையும்விலக்கிவிடுக. ஒழுங்கான ஜபம் கீர்த்தனை, பிரார்த்தனை, தியானம் முதலியன மூலம் தெய்வீக அருளைப் பெறுதற்கு உம்மையே தகுதியாக்குக. நன்மைக் கோட்பாடுள்ளவராயிருக்குக. பொறுமையாய்க் காத்திருக்குக; ஏதோ ஒருநாள் உமது வாழ்வு இறையருளால் பிரகாசமாக்கப் படும், உமக்கு ஆன்மார்த்த அறிவு ஊட்டப் படும்.

32. இச்சையே மனிதனின் மூலசக்தி. இச்சையே ஆன்மசக்தி. இச்சை ஏதொன்றையும் செய்யக் கூடும். இச்சா சக்தி மூலம் மனமும் புலன்களும் அடக்கப்படலாம். ஆசைகள் அழிக்கப் பட்டால் இச்சா சக்தி விருத்தியாகிறது. மனவுறுதி, பொறுமை, விருப்பம், கவனம், ஊக்கம், பற்றிக்கொள்ளுந்தன்மை, நிலைத்திருத்தல், ஆன்மத்தியானம்-இவையனைத்தும் இச்சா சக்தி சம்பாதிப்பதை எளிதாக்கும்.

33. தர்மமே உமது வாழ்வின் சிறந்த தோழன். சத்தியமும் அகிம்சையும் அதன் சகோதரர்கள். ஆசையின்மை தூய இருதயத்தின் வித்து. இவற்றுடன் நட்புக் கொண்டு எல்லையற்ற ராச்சியமாகிய நித்திய இன்பத்தை அடைக.

34. பார்க்கப்படும் முழுவுலகும் பரம்பொருளின் பேரண்டவடிவினது மகிமைவாய்ந்தவிராட்சுவரூபம். இயற்கையாகிய இறைவன் தமது 'கறைப் படுத்தாத' நிலையில் சர்வ வல்லமை வாய்ந்தவரின் உறுபல மகிமை வாய்ந்த தோற்றம். இயற்கை பிரகிருதி என்று பொருள்படுகிறது. பிரகிருதியே இறைவனது திவ்வியசக்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. உமது சிந்தனைகளை நல்லெண்ணங்களாலும் செயல்களாலும் அமைக்குக. பிரயாசைப் படுக. நல் ஒழுக்கம் பயின்றவராயிருக்குக. அனைவரையும் நேசிக்குக. யாருக்கும் அஞ்சற்க. உண்மை நாடுவோனாயிருக்குக. தர்ம விதிகளை ஓர்ந்தறிக. நீர் மேற்கொள்ளும் ஒவ்வொரு முன்னேற்ற மூலம், நீர் செய்யும் ஒவ்வொரு செயல்மூலம் நீர் சுதந்திரத்தை நோக்கி ஆன்மார்த்த அறிவை நோக்கி சத்தியத்தை நோக்கி நகர வேண்டும்.

## இராஜ யோகம்

பிரம்மசரிய விரதம் இராஜயோகத்தில் முதல் அங்கமான இயமத்தில் அடங்கியிருக்கிறது.

அப்பியாசம், வைராக்கியம், ஆகியவற்றின் மூலம் மனத்தைக் கட்டுப் படுத்துக.

தியானம் என்பது வேறு எவ்விதச் சிந்தனையுமின்றி தொடர்ச்சியான ஒரே சிந்தனைத் தொடர் ஆகும்.

ஏகாக்ரதா என்பது மனஒருமைப்பாடு.

ஈஸ்வரார்ப்ரணிதானம் என்பது இறைவனிடம் ஒருவன் தன்னை அர்ப்பணித்து விடுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ம யோகம்

[சுவாமி சிவானந்தர்]

இணக்கம் என்னும் பண்பு கர்மயோகிக்கு அடிப்படையானது. அதன்மூலம் அவன் மற்றவர் மனத்தைக் கவர்கிறான்.

தைரியம் கர்மயோகப் பாதைக்கு இன்றியமையாதது.

தானம் ஒரு நல்ல சுத்தீகரணி. இது பல பாவங்களைப் போக்குகிறது.

மறு அவதாரக் கோட்பாடு கர்மசித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது.

உள்ளச் சமநிலை கர்மயோகிகளுக்கு இன்றியமையாத பண்பு.

தெய்வீக சாந்நித்தியத்தை எங்கும் உணர்க. அவருடைய சிருஷ்டியில் ஒவ்வொரு அணுவிலும் தெய்வீக மகிமையைக் காண்க.

பெருந்தன்மை என்னும் பண்பு ஒரு கர்ம யோகியின் உள்ளத்தை விரிவடையச் செய்கிறது.

பணிவுடைமை கர்வத்தை அழித்து உண்மையான நல்ல சேவை செய்ய சாதகனைத் திருப்புகிறது.

அகச்சோதனை, உங்கள் நோக்கத்தை அறிய அத்தியாவசியம்.

களிப்போடு இருக்கும் குணம் அதிகமான வேலைசெய்ய சாதகனுக்கு உதவியாக இருக்கும்.

கர்ம யோகம் மனதைத் தூய்மைப்படுத்தி ஆத்மஞானத்தைப் பெற்றுக் கொள்ளச் சாதகனைத் தயார் செய்கிறது.

---

அச்சுப்பதிவு:- ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org